# NEWS CLIPPING – PRESS

| | | | |
|---|---|---|---|
| | | **Date** | Tue, 15 Aug 2023 |
| **Website** | Bernama.com | **No. of Pages** | 2 |
| **Section** | News | | |
| **Headline** | The amendment to the Personal Data Protection Act will consider the need to create a Data Protection Officer | | |
| **URL** | https://www.bernama.com/tam/news.php?id=2216591 | | |



# தரவுப் பாதுகாப்பு அதிகாரியை உருவாக்கும் அவசியத்தை, சுயத் தரவுப் பாதுகாப்புச் சட்டத் திருத்தம் பரிசீலிக்கும்




தனிநபர்களின் சுயத் தரவைப் பாதுகாக்க, சட்டம் 709 அல்லது சுயத் தரவுப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதன் மூலம், நிறுவனத்தில் தரவுப் பாதுகாப்பு அதிகாரி பதவியை உருவாக்குவதன் அவசியத்தை தொடர்பு மற்றும் இலக்கவியல் அமைச்சு பரிசீலித்து வருகிறது.

இந்தச் சட்டத் திருத்தத்தில் பரிசீலிக்கப்பட்ட விவரங்கள், வரும் அக்டோபர் மாதத்தில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுவதாக தொடர்பு மற்றும் இலக்கவியல் அமைச்சர் ஃபாஹ்மி ஃபட்சில் கூறினார்.

இன்று, கோலாலம்பூர் மாநாட்டு மையத்தில் நடைபெற்ற 2023 CyberDSA எனப்படும் ஆசிய இணைய இலக்கவியல் சேவை, தற்காப்பு மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் அவ்வாறு தெரிவித்தார்.

இதனிடையே, இணைய பாதுகாப்பு சட்டமசோதா குறித்து கருத்துரைத்த ஃபாஹ்மி, தேசிய இணைய பாதுகாப்பு அமைப்பான NACSA, அமைச்சரவையில் கொண்டு வருவதற்கான சட்டவரைவைத் தயாரித்து வருவதாக குறிப்பிட்டார்.

அச்சட்டமசோதா, இவ்வாண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என எதிர்ப்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.